

அமைச்சரின் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு ஆதரவான கருத்தைக் கண்டித்து,கழக மாணவர் அணி சார்பில் தருமபுரியில் BSNL அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆளும் சோபா மாடல் அரசால் ஏவப்பட்ட காவல்துறையினர் கழகத்தினரை கைது செய்தனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி,தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் தருமசெல்வன், நகர செயலாளர் நாட்டான்.மாது, மாணவர் அணி அன்பரசன், சந்தர், இளைஞர் அணி சிவகுரு, அசோக்குமார், கலைசெல்வன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய கழகத்தினர் ஏராளமான தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டனர்.




திருத்துறைப்பூண்டி தொகுதிக்குபட்ட இளைஞர்கள் தன்னெழுச்சியாக ஒன்று திரண்டு நடத்திய Gen Z சந்திப்புக்கூட்டம், மேட்டுப்பாளையம் ஜெஸ்டினா திருமண அரங்கில் எழுச்சியோடு நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



பொதுவெளியில் போதைப் பொருளை பயன் படுத்திய த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை கண்டித்தும், அவரை பதவி நீக்க செய்ய வலியுறுத்தியும் திருப்பூர் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்டச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக்குழு தலைவர் இல.பத்மநாபன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாணவர் அணி அமைப்பாளர் தாராபுரம் ஜி.குகன் முன்னிலையில் தாராபுரம் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கங்களை எழுப்பினர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினரை போலீசார் கைது செய்தனர். இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் பங்கேற்றனர்.

### தஞ்சை மத்திய மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா –

# வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல் - பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் , ஜூலை 1 –

தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மூன்று சட்டமன்ற தொகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உலக தமிழர்களின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநள் விழா மற்றும் தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு ஆகிய சட்டமன்ற



தொகுதிகளில் கழக வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி கூறும் வகையிலும், கீழ்க்கண்டவாறு பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது.

ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதியில் 02.07.2026 வியாழக்கிழமை மாலை 05.00 மணி ஒரத்தநாடு பேருந்து நிலையம் அருகில் நடைபெற உள்ள கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி சிறப்புரை யாற்றுகிறார். திருவையாறு சட்டமன்ற தொகுதியில் 06.07.2026 திங்கள் கிழமை மாலை 05.00 மணியளவில் திருவையாறு தேரடி திடல் பகுதியில் தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன் சிறப்புரை யாற்றுகிறார். தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதியில் 11.07.2026 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதர் சாலையில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி சிறப்புரை யாற்றுகிறார்.

மேற்கண்ட கூட்டங்களில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார் .

### நாமக்கல்லில் போலியோ சொட்டு மருந்து முகாமில் பரபரப்பு

# தாமதமாக வந்த அமைச்சரால் பெற்றோர், குழந்தைகள் தவிப்பு!

நாமக்கல், ஜூலை 1 –

நாமக்கல்லில் நடைபெற்ற தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமில் அமைச்சர் மருத்துவர் தாமதமாக வந்ததால், பெற்றோர்களும் குழந்தைகளும் சுமார் இரண்டு மணி நேரம் காத்திருந்து அவதியடைந்தனர்.

நாமக்கல் மாவட்டத்தில் பிறந்தது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதற்காக மாவட்டம் முழுவதும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட 1,192 மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை முகாம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நாமக்கல் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் காலை 7 மணிக்கே பெற்றோர்கள் குழந்தைகளுடன் வரத் தொடங்கினர். ஆனால், துவங்கிவைக்க வந்த அமைச்சர், மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தாமதமாக வந்ததால் காலை 9.30 மணி வரை சொட்டு மருந்து வழங்கப்படவில்லை. இதனால் பெற்றோர்களும் குழந்தைகளும் நீண்ட நேரம் காத்திருந்து கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த சமூக ஆர்வலர் வழக்கமான ரீல்ஸ் ரிப்போர்ட்டால் எரிச்சல் அடைந்து சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு நடவ டிக்கை எடுக்க வலியுறுத்தினார். அதன் பின்னர் மருத்துவக் குழுவினர் வந்து சொட்டு மருந்து வழங்கும் பணியை தொடங்கினர்.

இதுகுறித்து பெற்றோர்கள் கூறுகையில், ”காலை 7 மணிக்கே குழந்தைகளுடன் வந்தோம். ஆனால் மருத்துவர் வராததால் சுமார் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குழந்தைகளை நீண்ட நேரம் காத்திருக்க வைப்பதை தவிர்க்க, இதுபோன்ற முகாம்களில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் உரிய நேரத்தில் வர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இந்தச் சம்பவம் நாமக்கல்லில் போலியோ சொட்டு மருந்து முகாமில் பரபரப்பை ஏற்படுத்தியது.



நாகை மாவட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நாகை ஜெனரேஷன் இசட் திமுக (Nagai Genz DMK ) சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை ஒருங்கிணைப்பாளர் எஸ். முத்து வரவேற்று தொடக்க உரையாற்றினார்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் போதை பொருள் பயன் படுத்திய அமைச்சர் சரத்குமாரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கக் கோரி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். அருண் பிரசன்னா. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கோகுல் காளிதாஸ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர் போலீசார் 200 பேரை கைது செய்தனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ச. தியாகராஜன்

### ஜூலை 1 (2006)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்

நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது

# த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்!

## ஏராளமான கழகத்தினர் கைது!

மயிலாடுதுறை, ஜூலை 1 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் வழிகாட்டுதலின் படி கண்டன ஆர்ப்பாட்டம் மயிலாடுதுறை கிட்டப்பாஅங்காடி அருகே தலைமை தபால் நிலையம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி எம் ஸ்ரீதர், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் வை. சௌமியன்,

விவசாய அணி மாநில இணை செயலாளர் ஆர். அருள்செல்வம், விவசாய தொழிலாளர் அணி மாநில இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணை செயலாளர் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் மங்கை எம். சங்கர், மூவலூர் எம். மூர்த்தி, செல்லசேது.ரவிக்குமார்,

என்.இளைய பெருமாள், பிஎம்.அன்பழகன், எம். அப்துல் மாலிக், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், ஞான. இமையநாதன், அமிர்த. விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா, ப. முருகமணி, கு.வைத்தியநாதன், பஞ்சு.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ். கென்னடி, பேரூர் செயலாளர்கள் எம்.அன்பு செழியன், எம். சம்சுதீன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சந்தோஷ், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது,

வி.எஸ்.பிரபாகர், செல்வராஜ், முன்னாள் தலைவர்கள் மகேந்திரன், ஜெயபிரகாஷ் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஜெ.ஜுபையர் அஹமது, சௌ. சர்வோதயன், சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர். முன்னதாக அண்ணா பகுத்தறி மன்றத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு கிட்டாங்காடி வந்தடைந்து அங்கே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை காவல்துறையினர் கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து பின்னர் இரவு விடுவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே. தாவூது

### ஜூலை 1 (2004)



மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.